1972 ஆகஸ்டு 9]

சட்டத்தில் குறைபாடுகள் இருப்பதை அரசு உணருகிறதா? அவ்வாறு உணர்ந்து அரசு எதாகிலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதை இந்திய அரசும் உணர்ந்திருக்கிறது. எல்லா மாநில அமைச்சர்களும் உணர்ந்திருக்கிறார்கள். சமுதாயத்தின் சீர்கேடான நிலைமைகளுக்கு இவைகள் எல்லாம் சான்றுகள்.

Government Hospitals in all the Town Panchayats.

* 7. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to set up Government Hospitals in all the Town Panchayats in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

நகரப் பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்க மருத்துவமனை

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகரப் பஞ்சாயத்துக்களிலும் அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rat-falls at Tiruppur.

* 8. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether a number of cases of rat-falls have been reported at Tiruppur in Coimbatore District in October, 1971;

(*b*) if so, whether any attack of plague was brought to the notice of the Government; and

(*c*) the steps taken thereon?

[1972 ஆகஸ்டு 9

திருப்பூரில் எலிகள் சாவு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் 1971 அக்டோபர் திங்களில் பல எலிகள் செத்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், பிளேக் நோய் கண்டது பற்றி ஏதேனும் நேர்வுகள் அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டனவா?

(உ) அது குறித்து எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மன்றத்தின் முன் விவர அறிக்கை @ யொன்று வைக்கப்பட்டுள்ளது.

Government Hospital in Madurai.

*9. THIRU D. SANTOSHAM and THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether there is any proposal to start one more Government Hospital in Madurai;

(b) whether a private philanthropist has offered a large sum of money towards that hospital; and

(c) if so, the details thereof?

மதுரையில் அரசினர் மருத்துவமனை

திரு. டி. சந்தோஷம் &
திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் மேலும் ஒரு அரசினர் மருத்துவமனை தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) அந்த மருத்துவமனையைத் தொடங்க, தனியார் கொடையாளி ஒருவர் அதிகத் தொகை அளிக்க முன் வந்துள்ளாரா?

(உ) அதன் விவரங்கள் யாவை?

@ 93-ஆம் பக்கத்தில் I இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS